REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5000

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

பாகிஸ்தான் முன்னுள் அமைச்சர்
கராச்சியை விட்டு வெளியேற உத்தரவு

கராச்சி, டிச. 10—

பாகிஸ்தான் சர்க்காரில் வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய பஸ்லூர் ரஹ்மான் கராச்சி நகரை விட்டு வெளியேற வேண்டுமென்று பாகிஸ்தான் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

இந்த உத்தரவு சென்ற மாதமே பிறப்பிக்கப்பட்டதென்றும், ஆனால் கராச்சியில் அவர் வசிக்கும் காலம் சிறிது நீடிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

இப்போது, அவர் கராச்சியை விட்டு வெளியேற வேண்டுமென்ற உத்தரவு அமுல் செய்யப்படுகிறது என்று தெரிகிறது.

மலர் 2] சென்னை: கார்த்திகை 26உ சனி (11—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 27உ ஞாயிறு (12—12—54) [இதழ் 155

திருச்சியிலும் 'ராமாயணம்' தடுக்கப்படுகிறது!

நகர எல்லையில் 144 தடை உத்தரவு பிரகடனம்

தடையை மீறப்போவதாக இராதாவின் அறிக்கை

திருச்சிராப்பள்ளி, டிச. 10—

திருச்சி ரெவினியூ டிவிஷனல் அதிகாரி லெப்டினன்ட் கே. ஜே. சோமசுந்தரம், இன்று முதல் 15 நாட்களுக்கு திருச்சி, பொன்மலை, சீரங்கம் ஆகிய பகுதிகளின் எல்லைக்குள் தோழர் எம். ஆர். இராதா 'இராமாயண' நாடகத்தை நடிக்கக் கூடாது என்று கி. பு. கோ. 144-வது பிரிவின்படி தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்த உத்தரவின் மூலம் கூட்டங்கள் நடத்துவதும், ஊர்வலம் செல்வதும் தடுக்கப்பட்டிருக்கிறது.

திருச்சி நகரில் டிச. 11, 12 ஆகிய நாட்களில் தோழர் எம். ஆர். இராதா குழுவினரின் 'இராமாயண' நாடகம் நடைபெறுவதாய் அறிவிக்கப்பட்டிருந்தது.

மதுரையைப் போலவே திருச்சியிலும் குழப்பம் செய்யப் போவதாகக் கூறி, சிலர், 'தாக்குதலுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

அந்த நிலையில் திருச்சி நகரின் அமைதி குலையுமெனக் காரணங் காட்டி, சர்க்கார் 144 தடையுத்தரவு விதித்திருக்கின்றனர்.

இந்தத் தடையுத்தரவு நியாயமானதல்ல என்பதாகக் கூறி, தடையை மீறி நாடகம் நடத்தப் போவதாக தோழர் எம். ஆர். இராதா அறிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் காணப்படுவதாவது :

"எனது நாடகத்தால் அமைதி குலையுமெனக் காரணங்காட்டி, எனது உண்மையான 'இராமாயண' நாடகத்தைத் தடை செய்துள்ளனர்.

"அமைதி குலைவதற்குக் காரணமாயிருப்பவர்கள் — மகாலிங்க அய்யர் என்பவரும், மற்றும் ஒரு சிலரும்தான்.

"மறியல் குழு என்பது, எவ்வித அமைப்பு ரீதியாகவும் இயங்குவதல்ல. கூலிக்குச் சேர்க்கப்பட்ட காலிகளால்தான் அந்த மறியல் குழு ஏற்பாடாகியுள்ளது.

"'நான் நடத்தும் இராமாயணத்தால் மனம் புண்படும் எனக் கருதுபவர்கள் நாடகத்திற்கு வரவேண்டாம்; இந்த நாடகம், திராவிட இன உயர்வுக்கு மட்டும்தான்,' என்று பல சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்தும், நாடகம் நடைபெறும் கொட்டகை முன் இந்த விபரத்தை பெரிதாக எழுதியும் வைத்த பின்தான் நாடகம் நடத்தப்படுகிறது.

"மறியல் செய்பவர்கள் 30 பேர் இருந்தால், அமைப்பு ரீதியில் 3000-க்கும் அதிகமான திராவிட இயக்கத்தவர்களும், மற்றும் என் நாடகத்தை வரவேற்கும் ஆர்வம் கொண்ட பல்லாயிரக்கணக்கானோரும் இருக்கிறார்கள் என்பதையும் அரசாங்கம் அறியும்.

"பார்ப்பனர்களும், மனம் புண்படும் என்று கருதுகிறவர்களும் நாடகத்திற்கு வரக் கூடாது என்று கண்டிப்பாக அறிக்கை விடுத்தபின் திராவிடர்களை, என் இனத்தவர்கள், இந்த நாடகத்தால் மனம் புண்படாதவர்கள் மட்டும் நாடகம் பார்க்கலாம் எனக் கூறிக்கொள்கிறேன்.

"நாடகக் கொட்டகைக்கு நான் வாடகை தந்துவிட்ட பின் அது என்வீடு போன்றது; அதில் நான் என்னிஷ்டப்படி எதுவும் செய்வேன்.

"என் 'வீட்டிற்'குள் நடைபெறும் நாடகத்தை—என் இனத்தவருக்கு மட்டும்தான் என்று பகிரங்கமாக விளம்பரப்படுத்தி நடக்கும் நாடகத்தை—ஒரு சில பார்ப்பனர்களுக்காகத் தடை செய்வதென்றால் அது சட்டத்திற்கே புறம்பானதாகும்.

"கடவுளர்களாகக் கருதப்படும் இராமனையும்-சீதையையுமே நான் குறைகூறுவதாயும், அது சிலரின் மனதைப் புண்படுத்துகிறது என்றும் கூறித் தடை செய்திருப்பது பெருந்தவறு.

"இந்தத் தடை அவசியமற்றதும், உரிமையைப் பறிப்பதும், சட்டத்திற்குப் புறம்பானதும் என நான் கருதுவதால் இந்தத் தடையை நான் மீறுகிறேன்," உண்மையைக் கூறுவது குற்றமா? அதற்குத் தடையா?"

ஆயுதப் போலீசார் உண்ணாவிரதம்!

கல்கத்தா, டிச. 10—

ஆயுதந்தரித்த போலீஸ் படையின் ஒரு பிரிவினுடைய உணவு விடுதி நிர்வாகி பதவியிலிருந்து ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் நீக்கப்பட்டதின் விளைவாக, அந்தப் பிரிவினர் முழுவதும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

உணவு விடுதியில் சிறிது பொருள் நஷ்டம் ஏற்பட்டதையொட்டி, அந்த விடுதி நிர்வாகியாயிருந்தவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன், நஷ்டமான பணத்தை தனது சம்பளத்திலிருந்து ஈடுகட்ட வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்தனராம்.

பதவியிலிருந்து நீக்கப்பட்ட அவர், நேற்று முன்தினம் உடம்பு அசௌகரியம் எனக்கூறி மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறார். ஒரு நாள் ஓய்வு பெற மருத்துவர் அனுமதித்தார். மறுநாளும் மருத்துவ மனைக்குச் சென்று அங்கேயே தான் உண்ணாவிரதமிருக்கப் போவதாகக் கூறி விரதத்தைத் துவக்கியுள்ளாராம்.

பின்பு, அவரைத் தொடர்ந்து பலரும் உண்ணாவிரதமிருக்கத் துவங்கிவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

உண்ணாவிரதத்திற்கான காரணத்தைக் கூறவும் அவர்கள் மறுத்துவிட்டனராம்.

இலாகாவின் உயர்தர அதிகாரிகள், சம்பவம் நடைபெறும் இடத்திற்கு விரைந்துள்ளனர் எனத் தெரிகிறது.

மேலும், இதுபற்றி சர்க்கார் விடுத்துள்ள அறிக்கையொன்றில், கட்டுப்பாடு மிகுந்த போலீஸ் படையினர் இத்தகு காரியங்களில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாதெனவும், அவர்களுக்கு ஏதேனும் குறைகளிருப்பின் அவற்றை நீக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமெனவும் கூறுகிறது.

வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டது!

பம்பாய், டிச. 10—

பம்பாய் துறைமுக அதிகாரிகள் கடந்த மூன்று தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வந்தனரல்லவா. அவர்கள் எல்லாரும் இன்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவர் எனத் தெரிகிறது.

1941-ம் வருடத்திய அத்தியாவசிய சேவை (பராமரிப்பு)ச் சட்டத்தின் கீழ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்களை சர்க்கார் கட்டாயப்படுத்தி வேலை வாங்குமென இந்திய சர்க்கார் எச்சரித்ததின் பேரில் அதிகாரிகள் 34 பேர்களும் வேலைக்குத் திரும்ப முடிவு செய்தனர் எனத் தெரிகிறது.

இன்று துறைமுகத்தில் வேலை நின்றுவிட்டது. 22 கப்பல்கள் நடுக் கடலிலேயே கிடந்தன. ஒரே ஒரு கப்பல் மட்டும் துறைமுகத்திற்குள் கொண்டுவரப்பட்டதாம்.

(முன்னர் வந்த செய்திகள் 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளன.)

தாக்கீது இல்லையாம்!

"சென்னை மாநிலத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளின்மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்திய சர்க்காரிடமிருந்து சென்னை சர்க்காருக்கு தாக்கீது வந்திருக்கிறதா?"

என்று தோழர் என். கே. பழனிச்சாமி சட்டசபையில் கேட்டார்.

நிதி மந்திரி சுப்பிரமணியம், "அப்படியொன்றும் தாக்கீது வரவில்லை" என்று பதிலளித்திருக்கிறார்.

கோழிக்கோடில் விவசாயிகள் அறப்போர்

16 பேர் கைது

கோழிக்கோடு, டிச. 9—

கூத்தாலி எஸ்டேட்டில் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி குடியிருந்த விவசாயிகளை சர்க்கார் வெளியேற்றியது பற்றி இன்று காலை மாவட்ட அதிகாரியின் அலுவலக வாயிலில் பி.-சோ. கட்சித் தொண்டர்கள் மறியல் செய்தனர்.

போலீசார் 16 தொண்டர்களைக் கைது செய்தனர். மாலையில் அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனராம்; ஆனால், அவர்கள் மீண்டும் மறியல் செய்து கைதாயினர் என்று தெரிகிறது.

மாலையில் பி. சோ. கட்சியினர் தெருக்களில் சர்க்காரின் போக்கை எதிர்த்து ஊர்வலமாகச் சென்றனர் என்று தெரிகிறது.

விரும்பத்தகாத படங்கள்!

விரும்பத்தகாத படங்கள் — அவை இந்தியாவிலோ அன்றி வெளிநாடுகளிலோ — எங்கு தயாரிக்கப்பட்டவையாயினும் சரி, அவற்றைத் தடை செய்ய சட்டமியற்றுவதின் மூலமோ, அன்றி வேறுவிதமாகவோ சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க சிபாரிசு செய்யும் தனி நபர் ஒருவரின் தீர்மானம் ஒன்று டெல்லி மக்கள் (மேல்) சபையில் நிறைவேறியுள்ளது.

அறிவு புகட்டத் தக்கதும், மனத் திருப்தி அளிக்கும் படங்களும் தயாரிப்பதற்கு சர்க்கார் ஆக்கமளித்து உதவியும் செய்ய வேண்டுமென்று சபை சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

சீன—இந்திய ஒப்பந்தம்

திபேத் நாட்டிற்கு 2,200 டன் இந்திய அரிசி அனுப்பும் பொருட்டு கம்யூனிஸ்டு சீனாவிற்கும் இந்தியாவிற்கு மிடையே ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது எனத் தெரிகிறது.

'தினத் தந்தி' பொய்ச் செய்திக்கு மறுப்பு

எஸ். எஸ். இராசேந்திரன் தகவல்

"கவர்னர் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று கோரி, மறியல் செய்த செல்லப்பா என்பவர், எனது நாடக மன்றத்தைச் சேர்ந்தவர் என்பதாக 10—12—54 'தினத் தந்தி' பத்திரிகையில் கண்டேன்;

"செல்லப்பா என்னும் பெயருடையவர், எந்தச் சமயத்திலும் எங்கள் நாடக மன்றத்தில் இருந்தது கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

நாடகச் சட்டம்

கைவிடக் கோரி சேலம் நகரசபையில் தீர்மானம்

சேலம், டிச. 10—

சென்னை சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் 'நாடக சட்ட மசோதா'வைக் கைவிடுமாறு சர்க்காரைக் கோரி நேற்று நடைபெற்ற சேலம் நகரசபைக் கூட்டத்தில் அவசரத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

உறுப்பினர் டாக்டர் கே. ஆர். கோபால் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தார். காங்கிரஸ் உறுப்பினர்களான என். வி. அரங்கசாமி, தோழியர் சித்தம்மாள் ஆகியோர் இத்தீர்மானத்தை எதிர்த்தனர் என்று தெரிகிறது. இறுதியில் தீர்மானம் கைவிடப்பட்டதாம்.

தொழிலாளர்களிடை கைகலப்பு!

பலருக்குக் காயம்; சிலர் கைது

பெங்களூர், டிச. 10—

இங்குள்ள தனி ஆலை ஒன்றில் தொழிலாளரின் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக 86 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டது.

காயம் பட்டவர்களில் 5 பேர் போலீஸ்காரர்கள்.

இன்று, நகரெங்கும் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தலாகாதென மாவட்ட நீதிபதி தடையுத்தரவு பிறப்பித்துள்ளாராம்.

சென்ற மாதம் 4-ந் தேதியன்று ஆலை நிர்வாகிகள் சிலரை தொழிலாளர்கள் தாக்கியதின் விளைவாக ஆலை மூடப்பட்டதாம். மீண்டும் இம்மாதம் 6-ந் தேதி ஆலை திறக்கப்பட்டதாம். ஆனால் 50 தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டனராம்.

இதை எதிர்த்து சில தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குப் போகவில்லை. அவர்கள் ஆலை வாசலில் மறியல் செய்து வந்தனராம்.

இந்த நிலையில்தான் இன்று, வேலை செய்வதற்காக ஆலைக்குச் சென்றுகொண்டிருந்த தொழிலாளர்களுக்கும், மறியல் செய்த தொழிலாளர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது. போலீசார் மீதும் இதரர் மீதும் கற்கள் வீசப்பட்டும், போலீசார், தடியடிப் பிரயோகம் போன்றவற்றில் ஈடுபடவில்லையாம். பின், 'கலகம்' முடிந்ததும், போலீசார் பல தொழிலாளர்களைக் கைது செய்துள்ளனராம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 11—12—1954 சனி

இராமர் - சீதை காப்புச் சட்டம்!

சென்னை காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற நாடகக் கட்டுப்பாடு மசோதாவை, நாடகக் கலை 'கழுத்தறுப்புச் சட்டம்' எனக் கூறுவதைக் காட்டிலும், 'இராமர் - சீதை காப்புச் சட்டம்' எனக் கூறுவதே பொருத்தமாக உள்ளது. இதுதான் பொருத்தமான பெயர் என, புதியமசோதாவின் மீது சட்ட சபையில் சென்ற இரண்டு நாட்களாக நடைபெற்ற உரையாடல்களும், அவைகளுக்கு கல்வி அமைச்சர் கனம் சுப்ரமணியம் கூறிய சமாதானமும் சுட்டிக்காட்டுவதாக உள்ளன.

குறிப்பிட்ட ஒரு நாடகத்தை முன்கூட்டியே ஒரேயடியாக நடிக்க விடாமல் தடை செய்வதற்கு, நாடக சட்டத்தை அரசியல் சட்டத்திற்கு உடன்படும் வகையில், 1876-ம் ஆண்டு நாடக சட்டத்தில் திருத்தம் செய்தாலே போதுமானது என்று நேற்று நாம் எழுதி இருந்தோம். அதனால், தனது நினைப்பை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பினை அரசாங்கம் பெறுகிறது என்பதுடன், நாடக சட்டம் அரசியல் சட்டத்துடன் ஒத்துப் போகும் தன்மையும், அரசாங்கத் தடையால் பாதிக்கப்பட்டவர்கள் வழக்காடும் உரிமையும் ஏற்பட்டுவிடுகின்றன என்பதையும் குறிப்பிட்டோம்.

எந்த ஒரு நாடகமாக இருந்த போதிலும், பொதுமக்கள் ஆதரவு அதற்குப் போதிய அளவு இருந்தால் அல்லாது, அதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு இருப்பது என்பது, நாடகத்தைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்களால் முடியவே முடியாது. கருத்தைப் பரப்புவதற்காக நாடகத்தைப் பயன்படுத்திவரும் சமுதாய சீர்திருத்தக்காரர்களுக்கும் பொதுமக்கள் ஆதரவு போதிய அளவு கிடைக்காமற் போகுமானல், அச்சாதனத்தை அறவே கைவிடுவதைத் தவிர அவர்களுக்கும் வேறு வழி கிடையாது. எனவே, பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவுதான், குறிப்பிட்ட ஒரு நாடகத்தின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் முக்கிய அளவுகோலாகும்; பொதுமக்களுக்குள்ள பிறப்புரிமையாகும் இது. பொதுமக்களிடம் துளியும் நம்பிக்கை வைக்காத ஒரு அரசாங்கம்தான், இந்தப் பிறப்புரிமையை அவர்களிடமிருந்து பறித்து, தன்னிடம் அடிமையாக்கிக்கொள்ள முன்வரும். அதே முயற்சியில்தான், புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதா மூலம், சென்னை அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

புதிய நாடக மசோதா சட்டமாக்கப்பட்டால், அதனல் பாதிக்கப்பட இருப்பது நாடகக் கலை மட்டுமல்ல; தாங்கள் காண விரும்பும் கருத்துள்ள நாடகங்களைக் காணும் உரிமையும் பொதுமக்களுக்கு அறவே இல்லாமல் தொலையும்.

குறிப்பிட்ட ஒரு நாடகம் நடிக்கப்படுவதால், அமைதி குலையும் என சர்க்கார் அஞ்சுமானல், அத்தகைய நாடகங்களை நடிக்க விடாமல் தடுக்க, சட்ட புத்தகத்தில் சர்வ சஞ்சீவியாக 144 தடை சட்டம் இருக்கவே இருக்கிறது. அதை உபயோகித்து, இப்பொழுது செய்துவருவது போலவே, இனியும், பொதுமக்கள் பார்க்கக்கூடாது என அரசாங்கம் கருதும் நாடகங்களை நடிக்க விடாமல் தடுத்து வரலாம். அதன் பிறகு, அவ்வாறு தடுக்கப்பட்ட நாடகத்தில் பொதிந்துள்ள பகை மூட்டும் கருத்துக்கள் அல்லது காட்சிகள் என அரசாங்கம் முடிவு கட்டும் விஷயங்கள் மீது, அதற்குரித்தான கிரிமினல் சட்டத்தின்கீழ், குறிப்பிட்ட நாடகப் பொறுப்பாளர்மீது வழக்குத் தொடரலாம். அதற்கான விதிகளும், கிரிமினல் சட்ட புத்தகத்தில் ஏற்கனவே இருக்கவும் இருக்கின்றன.

குறிப்பிட்ட கிரிமினல் சட்ட விதிகளின் கீழ், ஒரு நாடகக் குழு பொறுப்பாளர் மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தால், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் தனது கட்சியை எடுத்துக்கூற நாடகக் குழு பொறுப்பாளர் சட்டப்படி கடமைப்பட்டிருக்கிருர். எதிர் வழக்காடுவதிலிருந்து அவர் தப்ப முடியாது. வழக்காடும் உரிமை அவர் பெறுவதோடு மட்டுமல்லாமல், குறிப்பிட்ட கிரிமினல் விதிகளுக்கு உட்பட்டதாக நாடகத்தில் கூறப்படும் கருத்துக்கள் அல்லது காட்சிகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் கடமையும் நீதிமன்றத்திற்கு ஏற்படுகிறது. குறிப்பிட்ட வழக்கில், அதிகார வர்க்கத்தின் முடிவு நியாயமானதா அல்லது எல்லை கடந்ததா என்பதையும் நீதிமன்றம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிடும். அதுகாலை, மன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலை ஆட்சியாளர்களுக்கும் ஏற்படுகிறது; நாடகக் குழு பொறுப்பாளர்களுக்கும், மன்றத்தின் தீர்ப்பு தனக்குச் சாதகமாக இருந்தால் அடக்குமுறைக்கு ஆளான நாடகத்தைத் தொடர்ந்து நடத்தவும், அல்லது தீர்ப்பு எதிராக இருந்தால் அந்த நாடகத்தைக் கைவிட்டு விடவுமான வாய்ப்பு உண்டாகிறது.

அதிகார வர்க்கத்தின் முடிவு, முடிந்த முடிவல்ல. பல துறைகளில் அதிகார வர்க்கத்தின் முடிவு, பொருந்தாது—அவசியமற்றது—பழிவாங்கும் தன்மை கொண்டது என்பது அனுபவம். அதிகார வர்க்கத்தின் அளவு கடந்தலைக் கட்டுப்படுத்தவும், அதன் செயலால் ஏற்படும் தீங்குகளிலிருந்து குடிமக்களைக் காக்கவும்தான் நீதிமன்றங்கள் உள்ளன். நீதிமன்றங்களுக்குள்ள அப்பெரும் கடமையைக் கூடுமான வரை கட்டுப்படுத்தி வருவதுதான், புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதா.

அதாவது, புதிய மசோதாவில் உள்ள கடுமையான விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது ஆட்சேபணைக்குரிய ஒரு அமைப்பு குறிப்பிட்ட ஒரு நாடகத்தில் இருக்கிறது என அதிகார வர்க்கம் முடிவு கட்டிவிடுமானல், முழு நாடகத்தையும் நடிக்கக்கூடாது எனத் தடை விதிக்க, புதிய மசோதாவின் மூலம் அதிகார வர்க்கம் உரிமை பெற்று விடுகிறது. அதிகார வர்க்கம் விதித்தத் தடையை எதிர்த்து வழக்காட, நாடகத் துறையினருக்கு இன்றுள்ள பண நெருக்கடியில் இயலவே இயலாது. எனவே, ஆட்சியாளர்களின் தடையை ஒப்பாமல் ஒப்புக்கொண்டு, நாடகத் துறையினர் வேறு நாடகத்தைத் தேட வேண்டியதுதான். புதிய நாடகத்தையும் அதிகார வர்க்கம் ஒப்புகிறதோ இல்லையோ என்ற அச்சம், புதிய மசோதாவின் விளைவாக நாடகத் துறையினருக்கு ஏற்படத்தான் ஏற்படும். அதன் பலனக, நாடகத் துறைக்கே ஒரு வணக்கம் செலுத்திவிட்டு, வேறு பணியினைத் தேட வேண்டிய கட்டாயமும் நடிகர் குழாத்திற்கு ஏற்பட்டே தீரும். இந்தச் சூழ்நிலையில், தமிழ் நாடகக் கலை மெள்ள மெள்ளச் சாகும் என்பதுடன், நீதிமன்றத்தின் பணியை அதிகார வர்க்கமே ஏற்றுக்கொண்டதாகவும் முடியும்.

இதனல், நாடகக் கலை சிறுகச் சிறுக மறைந்தொழிவது ஒரு பக்கம் இருக்க, தாங்கள் விரும்பும் நாடகங்களை மக்கள் கண்டு இன்புறுவது என்பதும் தொலைந்தே போகிறது. அதிகாரவர்க்கத்தினர் எத்தகைய நாடகங்களைப் பொதுமக்கள் பார்க்க வேண்டுமென விரும்புகிருர்களோ, அத்தகைய நாடகங்களை மட்டுமே காண வேண்டிய கட்டாயம் பொது மக்களுக்கு ஏற்படுகிறது.

பொதுமக்களில் பெரும்பான்மையினருக்கு ஏற்பட்டுள்ள—ஏற்பட்டுவரும் மனமாற்றத்தின் காரணமாக, இனியும் பக்தி நாடகங்களை நடத்திவர முடியாத நிலை நாட்டில் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை, நிதி அமைச்சர் உள்ளிட்டு, அனைவரும் அறிவர்.

இனி புராண நாடகங்களைக் காண்பவர் தொகை பெருகும் என எவரும் எதிர்பார்க்க முடியாது. எனவே, கூடிய விரைவில் புராண வகையிலும், நாடகக் கலை கூடிய விரைவில் தேய்ந்து மாய்வது நிச்சயம்.

காலமாற்றத்தின் காரணமாக புராண நாடகத் துறையும் அழியும்; புதிய நாடகக் கட்டுப்பாட்டின் கொடுமையின் விளைவாக புதுக்கருத்து நாடகத் துறையும் ஒழியும். இந்த நாசத்தைத்தான், புதிய மசோதா, நாடகக் கலைக்கும் பொது மக்களுக்கும் பரிசாக வழங்கக் காத்துக் கொண்டு இருக்கிறது.

கனம் சுப்ரமணியம் மகிழ, இராமனையும் - சீதையையும் நாடகப் பாத்திரங்களாக்கி, பக்தி வெள்ளப் பெருக்கெடுத்தோட உரையாடல் எழுதி, வெட்கப்படாமல் விஞ்ஞானம் தந்த பல வண்ண ஒளி விளக்கைப் பாய்ச்சி, நாடக மேடையில் விளையாட வைத்தாலும், அதைக் கண்டுகளிக்கப் பொது மக்கள் தயாராக இல்லை என்பதைக் கோவையாரே அறிவார். மண விலக்கிற்குச் சட்டமியற்றும் இக்காலத்தில், இராமனின் தெய்வத் தன்மையையும், சீதையின் கற்பு இலட்சணத்தையும் காப்பாற்றி வளர்க்க, புதிய நாடகக்கட்டுப்பாடு மசோதா என்ற பெயரில் 'இராமர் - சீதை' காப்பு மசோதா கொண்டுவர கனம் துடிதுடிக்கிருரே, அவருடைய அறிவையும் போக்கையும் என்னென்பது?

பெண்களின் மண வயதை உயர்த்துவதும், மணவிலக்கு உரிமை வழங்குவதும் கூடத்தான், இராமாயணத்தில் கிடையாது; இராமாயண காலத்திலும் கிடையாது. அவைகூடத்தான், மக்களின் மதக் கருத்தையும், மத உணர்வையும் குத்திப் புடிகாயப்படுத்துவதாக இருக்கின்றன. இவ்வாறும் கூறத்தான் செய்கின்றன, ஒரு சிறு சுயநலக் கூட்டம். அச்சிறு சுயநலக் கும்பலுக்கு அடிமையாகி தமிழ் நாடகக் கலைக்கு உலை வைத்து, மீளாப் பழியைத் தேடிக்கொள்ளும் கெடு நினைப்பை, இனியாவது கனம் அமைச்சர் விட்டுத் தொலைக்க முன்வரவேண்டும். வருவாரா?

இதிகாசங்களே இந்திய இலக்கிய முயற்சிக்கு மூலமாம்!

திராவிட மொழி இலக்கியங்களும் கூட இராமாயணத்தை மூலமாக கொண்டவையாம்

இராசேந்திர பிரசாத் கூற்று

"இந்தியாவின் மகத்தான இரு இதிகாசங்களான 'இராமாயண'மும், 'மகா பாரத'மும்தான், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பலதரப்பட்ட மக்களின் சிந்தனை, கலாச்சாரம், சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில், பொது இணைப்பை (?) ஏற்படுத்தியிருக்கின்றன.

'அநேகமாக இந்தியாவின் எல்லா மொழிகளிலும், குறிப்பாக இந்தியாவின் வடக்கு, கிழக்கு, மேற்கு பகுதிகளில் வழங்கும் மொழிகளிலும் உள்ள இலக்கியத் தோற்றம், மேற்கண்ட இரு இதிகாசங்களையோ அல்லது அவைகளின் பகுதிகளையோ பிரதேச மொழிகளில் மொழி பெயர்ப்பதின் மூலம் தான் ஆரம்பமாயிற்று.

"திராவிட மொழிகளை எடுத்துக் கொண்டால்கூட, 'மகாபாரதம்', 'இராமாயணம்' ஆகியவை, பிராந்திய மொழிகள் மூலம் பிரபல்யம் அடைந்த பின்புதான் இலக்கிய பாரம்பரியம் தோன்ற ஆரம்பமாகியது," என்று, டாக்டர் இராசேந்திர பிரசாத், டில்லி மலையாள சங்கத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட கலை விழாவைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர். அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிருர்:—

"இந்தியாவின் பிரதேச கலாச்சாரங்களில் வேறுபாடுகள் இருந்த போதிலும், இந்திய கலாச்சாரத்தில் (எங்கிருக்கிறதோ?) ஒற்றுமை இருக்க வேண்டும். வேறுபட்ட பல பிராந்தியங்களின் பாரம்பரியத்தையும், குணநலன்களையும் படம் பிடித்துக் காட்டும் பிரதேச கலாச்சாரங்களில் நிலவும் வேறுபாடுகள் தான் இந்திய ஒற்றுமைக்கு வெகு தந்திரமாக உதவியுள்ளன."

'ஆசை நரைக்கவில்லை'

கல்கத்தா, டிச. 10—

ஐ. சி. எஸ். அதிகாரிகளாயிருந்து ஓய்வு பெற்றுள்ள இருவர், மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாயிருந்து ஓய்வு பெற்றவர்கள் மூவர், தத்துவ சாஸ்திர நிபுணர் (டாக்டர் பட்டம் பெற்றவர்) ஒருவர்—ஆகியோரும் தங்களுக்கு வேலை தேடித்தரவேண்டுமெனக் கோரி இங்குள்ள சர்க்கார் வேலை தேடித்தரும் அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர் என்று தெரிகிறது.

மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் வேலை தேடி, பெயர் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாயும், ஆனல் வேலைக்கான சந்தர்ப்பங்கள் மட்டும் குறைந்து கொண்டே வருவதாயும் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருராம்.

கட்சிக் கொள்கையை பலியிடாதீர்!

பட்டத்திற்கு வேண்டுகோள்

எர்ணுகுளம்,—

"காங்கிரசோ அல்லது வேறெந்த ஒரு கட்சியினுடையதோ ஆதரவைப் பெறுவதற்காக, திரு—கொச்சி பி.—சோ. கட்சி சர்க்கார், தனது கட்சிக் கொள்கைகளைப் பலியிட வேண்டாம்," என்று, பி. — சோ. கட்சியின் தலைமை இடம் கேட்டுக் கொண்டுள்ளதாக, பி.-சோ. கட்சிப் பிரமுகர் வில்சன் என்பவர் தெரிவித்திருக்கிருர்.

நாகபுரியில் நடைபெற்ற பி. சோ. கட்சி மாநாட்டுக்கு, திரு—கொச்சி மாநிலத்திலிருந்து சென்ற 14 பிரதிநிதிகளில் 7 பேர் பட்டம் மந்திரி சபைக்கு எதிராகவே வாக்குச் செய்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாகபுரியில் நடைபெற்ற அம் மாநாட்டில், டாக்டர் லோகியாவின் கொள்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டதாகவும், பி. - சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவுக்கு மதிப்புத் தரவேண்டுமென்ற முறையிலேயே அத்தீர்மானத்தைப் பலரும் ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறியிருக்கிருர்.

காசிம் ரஜ்வி

ஐதராபாத் ராஜப் பிரமுகராம்!

வேலைக்கு மனுபோட்டவர் கருத்து

ஐதராபாத் கம்மம் மாவட்டத்தில் வேலை ஒன்றுக்கு மனு போட்டிருந்த ஒருவர், ஐதராபாத் ராஜப் பிரமுகரின் பெயர் என்னவென்று கேட்கப்பட்ட கேள்விக்கு, 'காசிம் ரஜ்வி' என்று பதில் அளித்தாராம்!

'கல்கி'யின் மறைவு

சென்னையில் அனுதாப கூட்டம்

'கல்கி' கிருஷ்ணமூர்த்தியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், இன்று சென்னை பல்கலைக் கழகக் கட்டிடத்தில் தமிழ் வளர்ச்சிக் கழக சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது.

கூட்டத்திற்கு சட்ட சபைத் தலைவர் ஜே. சிவசண்முகம் பிள்ளை தலைமை தாங்கினர்.

மந்திரிகள் பக்தவத்சலம், சுப்ரமணியம் உட்பட பலரும், திரு. 'கல்கி'யின் பணியினையும், தமிழ்ப் பற்றையும் குறித்துப் பாராட்டிப் பேசினர்.

உரிமைப் பிரச்சினை

சென்னை சட்டசபையில் நிராகரிப்பு

அரசியல் சட்டத் திருத்தம் பற்றி, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்கு எழுதியிருந்த கடிதத்தின் உள்ளுரைகளை, சபைக்குத் தெரிவிக்காமல், அதற்குச் சம்பந்தமில்லாத அயல் நிறுவனமான அகில இந்தியக் காங்கிரஸ் குழுவின் செயலாளருக்கு அனுப்பியது சரியல்ல என்று கூறி, சென்னை சட்டசபையில் பி. சோ. கட்சி உறுப்பினர் நாராயண குருப் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினர்.

அரசியல் சட்டத்திருத்தம் செய்வது சம்பந்தமாக சென்னை சர்க்காரும், முதலமைச்சர் காமராசரும், பிரதமர் நேரு பண்டிதருக்கும் காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளருக்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியது குறித்தே இப்பிரச்சினை எழும்பியது.

அந்த உரிமைப் பிரச்சினை பரிசீலனை செய்யப்பட்டபின், மந்திரி, தமக்குப் பொதுச் செயலாளரிடமிருந்தும், பிரதமரிடமிருந்தும் வந்த தகவல்களின் விவரத்தை வெளியிட மறுப்பது உரிமைப் பிரச்சினை ஆகாதென்றும், பிரதம மந்திரிக்கும், பொதுச் செயலாளருக்கும் முதலமைச்சர் அனுப்பிய பதில் ஒரே விதமானதென்று யூகித்துப் பேசப்படுகிறது என்றும், அப்படி யிருந்தாலும், முதலமைச்சர்மீது நம்பிக்கையில்லா பிரேரபணை கொண்டு வரலாமே தவிர, ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை என்றும் கூறி, சபாநாயகர், அந்த உரிமைப் பிரச்சினையை நிராகரித்தார்.

✶

மேலும் ஒரு உரிமைப் பிரச்சினை

தமது தொகுதி மக்களுக்குத் தாம் எழுதும் கடிதங்களும், அங்குள்ளவர்கள் தமக்கு அனுப்பும் கடிதங்களும், விசேட பிராஞ்சு போலீசாரால் குறுக்கிட்டுப் பார்வையிடப்படுகின்றன என்றும், மாநில சர்க்காரின் தாக்கீதுக்கிணங்கவே இம்மாதிரி செயல்கள் நடைபெற்றுள்ளன என்றும், இவ் விஷயத்தை உரிமை கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டும், தோழர் எம். கலியாண சுந்தரம் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினர்.

இதுபற்றி சபாநாயகர் பேசுகையில், சட்டசபை காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் தஸ்தாவேஜுகளும், கடிதங்களும் இவ்வாறு போலீஸ் பரிசீலனைக் குள்ளாக்கப் படுகின்றனவா என்பதைக் குறிப்பிடவில்லை என்றும், இதையும், நிலைமை பற்றிய எல்லா விஷயங்களையும் நன்கு யோசிக்க சபை உறுப்பினர்களுக்கு அவகாசம் தர விரும்புவதாகவும், உரிமை விஷயங்கள் உறுப்பினர்களுக்குப் புதிதாகையால், அதுபற்றி யோசிப்பது நல்லது என்றும் குறிப்பிட்டார்.

அனுதாப வேலை நிறுத்தம்

பம்பாய் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு வழிகாட்டி அழைத்துவரும் 'பைலட்' அதிகாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்களல்லவா? அவர்களின் கோரிக்கைகளை டிசம்பர் 14-ம் தேதிக்குள் நிறைவேற்றுவிடில், அவர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக அன்றுமுதல் தாங்களும் பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென பம்பாய் துறைமுக டிரஸ்ட் தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

பொது வேலைநிறுத்தம் ஏற்பட்டால் அது நேரிடையாக 3,000 தொழிலாளர்களையும், மறைமுகமாக 11,000 தொழிலாளர்களையும் பாதிப்பதாக அமையுமெனவும் சொல்லப்படுகிறது.

கருத்தைக் கவரும் விளம்பரங்கள்

அகற்ற நீதிமன்றத்தில் வழக்கு

ஐதராபாத், டிச. 3—

ஐதராபாத் பஸ் நிலையத்திற்கு அருகே அப்சல் கஞ்ச் பாலத்தின் இருபுறங்களிலும் ஒட்டப்பட்டிருக்கும் பெரிய அளவுடைய திரைப்பட விளம்பரங்களை அகற்றுமாறு உத்திரவிடக் கோரி வழக்கறிஞர் ஒருவர் நகர மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

மக்களின் கருத்தைக் கவரும் வண்ணம் இந்த விளம்பர சுவரொட்டிகள் இருப்பதால், நடந்து செல்வோரும், கார்களில் செல்வோரும் அதன் மீது கருத்தைச் செலுத்த நேரிடுகிறதென்றும், இதனால் ஆபத்து ஏற்படுகிறதென்றும் வழக்கில் கூறப்பட்டிருக்கிறது.

மாஜிஸ்திரேட் இது பற்றி அறிக்கை அனுப்புமாறு நகர சபைக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்திய சர்க்கார் விளம்பரங்கள்

பத்திரிகைகளில் பாகுபாடு காட்டுவதில்லையாம்

எதிர்க்கட்சி பத்திரிகைகளுக்கு முதலிடமாம்!

இந்திய மக்கள் (மேல்) சபையில் பூபேஷ் குப்தா என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர், தாம் ஆசிரியராக இருக்கும், 'சுவாதி நாதா' என்ற பத்திரிகைக்குப் பல்லாண்டுகளாக சர்க்கார் விளம்பரங்களை ஏன் தருவதில்லை என்று கேட்டார்.

மந்திரி கேஸ்கர், இக்கேள்விக்குப் பதிலளிக்க அவகாசம் கோரிவிட்டு, "பொதுவாக விளம்பரம் தருவதில், பத்திரிகைகளிடை வேறுபாடு காட்டுவதில்லை. குறிப்பாக, பத்திரிகைகள் தேவையான விற்பனை அளவைப் பெற்றிருந்தால், பாகுபாடு காட்டுவதில்லை. மேலும், எதிர்க்கட்சிப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருவதில் முதலிடம் தரப்படுகிறது" என்று கூறினர்.

உடன் ஒரு காங்கிரஸ்காரர், "ஏன் எதிர்க்கட்சிப் பத்திரிகைகளுக்கு முதலிடம் தரவேண்டும்?" என்று கேட்டார்.

சபைத் தலைவர் டாக்டர் ராதா கிருஷ்ணன், "நாம் ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நடத்துகிறோம்; எனவே, எதிர்க்கட்சி சரியாக இயங்க வேண்டுமென நாம் விரும்புகிறோம்," என்றார்.

பண்டித நேரு தொடர்ந்து, "மேலும் நாம், பலவீனர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம்; அதனாலும்தான் அவர்களுக்கு முதல் இடம் தருகிறோம்" என்று குறிப்பிட்டார்.

முன்பாக இந்திய அரசாங்கம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்காக செலவு செய்த தொகை விபரங்களை வெளியிடப்பட்டன.

1951—52-ல் ரூ. 6,72,526;
1952—53-ல் ரூ. 6,66,898;
1953—54-ல் ரூ. 7,15,131.

இவை இந்தியாவிற்குள் உள்ள பத்திரிகைகளிலும், வெளிநாட்டுப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்த வகையில், 1952—53-ல், ரூ 20,000; 1953—54-ல் 75,000 ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ளதாம்.

ஜாமீன் தரப்பட்டது!

புதுடில்லி, டிச. 9—

லஞ்சக் குற்றத்திற்காக ஆறு மாதம் தண்டிக்கப்பட்டு சிறையிலிருக்கும் எஸ். ஏ. வெங்கட்ராமய்யர் என்ற ஐ. சி. எஸ். அதிகாரியை, இடைக்கால ஜாமீனில் வெளிவிட தலைமை உயர்நீதி மன்றம் உத்திரவிட்டுள்ளது.

அவர் ரூ. 10,000 ஜாமீன் கட்டிவிட்டு வெளிவர வேண்டும் எனத் தெரிகிறது.

வெள்ளையராட்சியின் நினைவுச் சின்னங்கள்

அகற்றுவது பற்றி மாநில அரசாங்கங்களின் கருத்து

பிரிட்டிஷ் ஆட்சியின் நினைவுச் சின்னங்களாக உள்ள சிலைகள், இதரவைகளை அப்புறப்படுத்துவதுபற்றி பேசும்போது, அவைகளை அகற்றுவதனுல், காமன்வெல்த் நாடுகளில் எற்படும் எதிரொலியையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்," என்று உத்திரப் பிரதேச அரசாங்கம் கருத்து தெரிவித்துள்ளது.

வெள்ளையராட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட பல நினைவுச் சின்னங்களை அகற்றுவது பற்றி தங்கள் தங்கள் கருத்தையறிவிக்குமாறு, மாநில அரசாங்கங்களை மத்திய அரசாங்கம் கேட்டிருந்தது. அதையொட்டியே உத்திர பிரதேசம் மேற்கண்டவாறு தன்கருத்தை அறிவித்துள்ளது எனத் தெரிகிறது.

மத்திய அரசாங்கம் வகுக்கும் கொள்கைப்படி தான் நடந்து கொள்ளச் சித்தமாயிருப்பதாக பம்பாய் அரசாங்கம் தெரிவித்துள்ளதாம்.

சென்னை அரசாங்கம் இந்த வெள்ளையரின் நினைவுச் சின்னங்கள் சிலவற்றை வைத்துக்கொண்டு மற்றவற்றை அகற்றிவிடத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆந்திர அரசாங்கம் சிலைகளை அகற்றவே தேவையில்லையென்று கருதுகிறதாம்.

இத்தகவல்களை மத்திய கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆசாத், டாக்டர் கிருஷ்ணா ராவின் கேள்விக்குப் பதிலாகத் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

துறைமுக அதிகாரிகள் வேலை நிறுத்தம்

பம்பாய் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு வழி காட்டி, கப்பல்களை பாதுகாப்பாக துறைமுகத்திற்குள் அழைத்து வரும் 'பைலட்' அதிகாரிகள் நேற்றிரவு முதல் வேலை நிறுத்தம் துவக்கியுள்ளனர் என்றும், இதனால் துறைமுகத்தில் கப்பல் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது.

தங்கள் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமெனவும், சம்பள உயர்வு, போக்குவரத்துப்படி உயர்வு, வைத்திய வசதி இவைகளுக்காக இந்த அதிகாரிகள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்.

26 'பைலட்' அதிகாரிகள், 11 'பெர்த்திங்' அதிகாரிகள் ஆகியோர் (5 வெள்ளையர்கள் உள்ளிட்டு) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதினுல் துறைமுகத்துள் கப்பல்கள் வரமுடியவில்லை.

நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் அதிகாரிகள் இம்மாதிரி வேலை நிறுத்தத்திலீடுபடுவது பம்பாய் துறைமுகத்தின் சரித்திரத்திலேயே இதுவே முதன் முறையாம்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு

ஐ. நா.-வில் ரஷ்யா புகார்

நியூயார்க், டிச. 9—

"செஞ்சீனா மீது அமெரிக்கா, ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறது; இச் செயலைக் கண்டிக்கவேண்டும்,"

என்று ஐ. நா.-வில் விசேட அரசியல் குழுவில் ரஷ்யப் பிரதிநிதி ஒரு பிரேரபணை கொண்டுவந்தார்.

பார்மோசாத் தீவிலும் சீனக் கடலிலும் அமெரிக்கா தனது படைகளை நிறுத்தி ஆக்கிரமிப்புச் செயல்கள் புரிவதாகவும், இதனால் தூரக் கிழக்கின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருப்பதாயும் ரஷ்யப் பிரதிநிதியின் பிரேரபணை கூறுகிறது.

ரஷ்யப் பிரதிநிதியான ஸாபலாவ் பேசுகையில், 'பார்மோசாவிலிருந்து சீன மீது நடத்தப்படும் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்காதான் நேரடியான பொறுப்பாளியாகும்,' என்று குற்றஞ்சாட்டினர்.

அரசாங்க லாரிகள்

சொந்த கட்சிக்கு விற்றனர்

சட்ட சபையில் விவாதம்

சென்னை—ஆவடியில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டிற்கான வரவேற்புக் குழுவுக்கு, 4 'சிவில் சப்ளை' இலாக்கா லாரிகள் விற்கப்பட்டிருப்பது பற்றி சட்ட சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் பக்தவத்சலம், "இந்த விற்பனையில் தவறுனது ஒன்றுமில்லை; லாரிகளின் புத்தக மதிப்பு விலை காணப்படவிலுனும், நிபுணர்கள், அதற்கான மார்க்கெட் விலை ரூ. 19,500 என்று நிர்ணயித்தனர்; அந்த நிர்ணய விலைக்கும் அதிகமாக, ரூ. 22,000 கொடுத்து வாங்க யாரும் முன்வராதபோது அதை சர்க்கார் விற்றதில் தவறேதுமில்லை" என்று பதிலளித்திருக்கிறார்.

"ஏலம், டெண்டர் அறிவிப்புகள் ஏதும் இல்லாமல் இம்மாதிரி விற்பதன் மூலம், சர்க்கார் தவறுன முன் மாதிரி நடவடிக்கையை ஏற்படுத்துகிறதல்லவா?" என்று கேட்கப்பட்டதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர், "இது ரணமான முடையினென்றும், அதிக பட்சமான தொகையைப் பெற சர்க்கார் ஆவல் கொண்டிருந்ததென்றும், இச்செய்கை, பின்னுல் நடப்பவைகட்கு முன்மாதிரியானதொன்றுகாது," என்றும் கூறியிருக்கிறார்.

தோழர் ஏ. இரத்தினம் எம். எல். ஏ., அவர்கள், "லாரிகளுக்கான 'பில்' ராம்நாத் கோயங்காவுக்கா அல்லது வரவேற்புக் குழுவுக்கா கொடுக்கப்பட்டது?" என்று கேட்டதற்குப் பதில் கூறுகையில், தமக்கு அதுபற்றித் தெரியாதென்றும், அக்கேள்விக்குப் பதிலளிக்க தமக்கு அவகாசம் வேண்டும் எனவும் கூறினர்.

பிர்லாவின் திட்டத்திற்கு இணங்க இந்திய அரசாங்கம் இசைவு!

பிர்லா அமைப்பதற்கு விரும்பிய இரண்டு இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் பற்றிய, இந்தியப் பேரசின் மந்திரிசபையில் மீண்டும் எற்பட்டு, ஒப்பு முடிவெடுத்த சேயாபிரைத், இதன் தேர்திதிலை பெறுகப்பட்டுவிட்டதாம். இந்தப் பிரச்சினை இப்போது சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாம்.

பிரிட்டிஷாரின் உதவியுடன் பிர்லா திட்டியுள்ள புதிய தொழில் திட்டங்களை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

பிர்லா அமைக்க விரும்பிய தொழில் திட்டங்களின் மூலதனத்தில் பெரும் பங்குகளை சர்க்காரே ஏற்றுக்கொள்ளுவதெனவும் முடிவாகியுள்ளதாம்.

'புதிய இரும்பாலைகளை, சர்க்கார் துவக்க வேண்டுமே தவிர, தனிப்பட்டோர் துவக்கக்கூடாது' என்ற இந்திய சர்க்காரின் கொள்கை இப்போது காற்றில் பறக்கிறதுபோலும்!

பிர்லா, இரும்புத் தொழிலில் ஈடுபடுவதை அனுமதிக்காவிட்டால் தொழில் வர்த்தக மந்திரியாயிருக்கும், டி. டி. கிருஷ்ணமாச்சாரி பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகக்கூட அரசாங்கத்தை பயமுறுத்தினர்கள்.

புதிய சமரசத் திட்டப்படி, துர்காபூரில் ஆரம்பமாகும் பிர்லாவின் இரும்புத் தொழிற்சாலையில் மேற்கு வங்க சர்க்காருக்கும் பங்கு இருக்குமாம்.

பிர்லாவின் பங்கு மூலதனத்தில் மிகச் சிறிய அளவே இருக்குமெனத் தெரிகிறது.

வாழ்க்கை ஒப்பந்தம்

அ. பொன்னம்பலனர் விளக்கவுரை

6—12—54 காலை 9 மணிக்கு நாமக்கல் அடுத்துள்ள காதப்பள்ளியில் தோழர் அ. பொன்னம்பலனர் தலைமையில், தோழர் சித. பசவலிங்கம் — தோழியர் லீலாவதி திருமண வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு, மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியை மன்றத்தார் முன்னிலையில் படித்து, மலர் மாலை அணிவித்துக்கொண்டனர். மணமகன், மணமகளுக்குத் தாலியும் சூட்டினர். மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் துறையூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் மாதுர்முதம் பி.ஏ., தி. ப. அழகமுத்து (நாமக்கல் தி. மு. கழக செயலாளர்), என். பி. செல்லப்பா, காதப்பள்ளி என். இராசகோபால் ஆகியோர் வாழ்த்துரை கூறினர்.

தலைவர் முடிவுரையில், புரோகிதச் சடங்குகள் ஒழிந்த அர்த்தமற்ற பழக்கவழக்கங்களும், மூடநம்பிக்கைகளும் ஒழிந்த ஆடம்பரமற்ற, மனமொத்த திருமணங்கள் நாட்டில் பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கில் நடைபெற்றிருக்கிறதென்றும், இத்திருமணங்களில் மணமக்கள் அன்புடனும், ஒற்றுமையுடனும், சம உரிமையுடனும் இல்லற வாழ்க்கையை இனிது நடத்தி வருகின்றனரென்றும், தேவைக்கு ஏற்றபடி மக்கட்பேற்றையும் அளவுபடுத்திக் கொள்ளுதல் அறிவுடைமை என்ற தெளிவு மக்களிடம் ஏற்பட்டு வருகிறதென்றும் கூறினர்.

இத்தகைய திருமணங்களைப் பதிவு செய்துகொள்வது எளிய முறை என்றும், இதுவரை நடைபெற்ற திருமணங்களை சட்டபூர்வமாக ஒப்புக்கொண்டு, பெண்கட்கு மண உரிமை, சொத்துரிமை, விவாக விலக்கு போன்ற பாதுகாப்புகளையும் சட்ட மூலமாகச் செய்ய அரசியலார் திட்டமிட்டு வருகிறார்களென்றும் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில் திருமணங்கள் எளியமுறையில் ஆடம்பரமின்றி, புரோகிதச் சடங்குகளின்றி நடைபெற சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் ஒத்துழைத்து ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பால்ய மணம் — பொருந்தா மணம் ஒழிக்கப்பட வேண்டுமென்றும், கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம் நாட்டில் அதிகம் நடைபெற வேண்டுமென்றார்.

நகை, சொத்து, பணம், சோதிடப் பொருத்தம் ஆகியவைகளைத் தேடி இடர்படுவதை விட்டு, மண வாழ்க்கைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தீராத ஆண்-பெண் இருவர் மனவிருப்பம் கேட்டு, ஒன்றுபட்ட இருவர் உள்ளக் கிடக்கையை அறிந்து, அவர்கள் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை நடத்த உதவி புரிய வேண்டுமென்றும், இம்முயற்சிகள் நாட்டில் இனிது நடைபெற இளைஞர்களும், பெண்மக்களும், பெற்றோர்களும் பேராதரவு அளிக்க முன்வரவேண்டுமென்றார்.

பழமை என்றும், வழக்கம் என்றும் அறிவுக்குப் பொருத்தமற்ற செய்கைகளுக்கு ஆக்கம் தேடுதல், கேடுதான் பயக்குமென்றும், 25, 30 ஆண்டுகட்கு முன்பு இருந்த சமுதாய எதிர்ப்புகள் இன்று பெரிதும் குறைந்துவிட்டது என்றும் விளக்கினர். இறுதியில், மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரைகள் கூறினர்.

மணமக்களுக்கு வரவேற்பு, வாழ்த்து—மடல்களும், வெள்ளிச் சாமான்களும், அறிவு வளர்ச்சிக்கேற்ற நூல்களும், ரொக்கமாக ரூபாய்களும், பரிசுகளாக—உறவினர்களாலும், நண்பர்களாலும் வழங்கப்பட்டது.

மணமக்கள், "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ 10/ அன்புடன் உதவினர்—வரப்பெற்றோம் — நன்றி— பொறுப்பாளர்.

சென்னை சட்டசபையில்.....

★

மாவட்ட மருத்துவ மனை

செங்கற்பட்டிலிருக்கும் மாவட்ட தலைமை மருத்துவ மனையை காஞ்சீபுரத்திற்கு மாற்றும் திட்டத்தை சர்க்கார் நிறுத்திவைத்துள்ளது.

காஞ்சியின் மக்கட்தொகை ஒரு இலட்சமாகவும், செங்கற்பட்டின் மக்கட்தொகை 25 ஆயிரமாகவும் இருப்பதால் தலைமை மருத்துவ மனையை, காஞ்சிக்கு மாற்றலாம் என மாவட்ட மருத்துவ அதிகாரி யோசனை கூறினார்.

மாவட்ட மருத்துவ ஆலோசனைக் குழுவும், செங்கற்பட்டு நகரசபைத் தலைவரும் இந்த யோசனையை எதிர்த்து, தலைமை மருத்துவ மனை செங்கற்பட்டிலேயே இருக்க வேண்டும்; காஞ்சிக்கு வேண்டுமானால் வேறொரு புதிய மருத்துவ மனை துவக்கிக்கொள்ளலாம் என்று கூறியுள்ளனர்.

இந்தத் தகவலை, சுகாதார மந்திரி ஷெட்டி கூறியிருக்கிறார்.

பெண் ஊழியர்கள்

1953-ல், சென்னை சர்க்காரின் அச்சுக்கூடத்தில் மொத்தம் 70 பெண் ஊழியர்கள் பணிபுரிந்தனர்.

இவர்களில் 10 பேர் குமாஸ்தாக்கள், 2 பேர் டெலிபோன் ஆபரேட்டர்கள், 1 தபால் அனுப்புபவர், 31 ஜூனியர் பைண்டர்கள், 24 அச்சுக் கோர்ப்பவர்கள் 1 குப்பை கூட்டுபவர்—ஆகியோர் உள்ளனர் என்று, மராமத்து மந்திரி ராமநாதபுரம் ராஜா தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு

சர்க்கார் ஊழியர்கள் தங்கள் பதவி உயர்வுக்கான வகையில் அரசியல், மற்றும் வெளி செல்வாக்கினையோ மேலதிகாரிகளிடம் கொண்டுவரக் கூடாது என்று சர்க்கார் ஊழியர்களின் ஒழுங்கு விதிகளில் 24-வது பிரிவு கூறுகிறது. என்றும், சர்க்கார் ஊழியர்கள் இந்த ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டே வேலையிலமர்கின்றனர் என்றும் மந்திரி சுப்ரமணியம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

ஆசிரியர்கள்

மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தபாலதிகாரிகளாக (போஸ்ட்மாஸ்டர்களாக) பணிபுரியக் கூடாதென 1954-ல் சேலம் மாவட்ட அதிகாரி உத்திரவிட்டது உண்மைதான் என்றும், ஆனால் பின்பு, ஆசிரியர்கள் அம்மாதிரிப் பணி புரிய அனுமதிக்கப்பட வேண்டுமென சர்க்கார் உத்திரவிட்டுள்ளது என்றும் மந்திரி சுப்ரமணியம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாணவராயிருக்கும் 'அரசியல்வாதி'

சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று வேண்டும் என்ற கோரிக்கை குறித்து தோழர் கே. விநாயகம் சபையில் கேள்வி கேட்டபோது "திரு. விநாயகம் சட்டக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்திருப்பதால்தான் அவ்வளவு அக்கரை காட்டுகிறார்," என்று பலத்த சிரிப்பொலிக் கிடையே அமைச்சர் சுப்பிரமணியம் பதிலிறுத்திருக்கிறார்.

மின்சார நிலையங்கள்

மின்சார உற்பத்தி நிலையங்களை சர்க்கார் எடுத்து நடத்துவது சம்மந்தமாக சர்க்கார் திட்டமிட்டு வருகிறது; எந்தக் 'கம்பெனி'கள் சரிவர நடந்து கொள்ளவில்லையோ அவற்றை முதன் முதலில் சர்க்கார் எடுத்து நடத்தும். எந்தக் கம்பெனியை எப்பொழுது எடுத்துக் கொள்வது என்பது பற்றிய முடிவு இப்போதே கூற இயலாது என்று மராமத்து மந்திரி கூறியிருக்கிறார்.

வழக்குத் தொடுத்திருக்கிறார்களாம்!

சென்னையில் ஓடாது நின்றுவிட்ட டிராம்வே கம்பெனி, சர்க்காருக்குத் தரவேண்டிய பாக்கி மின்சார இலாக்காக் கணக்குப்படி ரூ. 9,26,186—2—3 ஆகும். ஆனால் இதில் ரூ. 3½ லட்சத்தையே கம்பெனி ஒத்துக்கொண்டுள்ளது. பாக்கியைத் திரும்பிப் பெற சர்க்கார் கம்பெனி மீது வழக்குத் தொடர்ந்துள்ளது. கம்பெனி மூடப்பட்ட நேரத்தில் 109 டிராம் கார்கள் இருந்தன. இதில் எவ்வளவு நல்ல நிலைமையிலிருக்கின்றனவென்பது சர்க்காருக்குத் தெரியாது என்ற தகவல்களை, மந்திரி ராமசாமி படையாச்சி, கேள்விகளுக்குப் பதிலாகத் தந்துள்ளார்.

கவனிப்பார்களாம்

நிதி நிலைமை அனுமதிக்கும் போது, அரசாங்கத்தில் வெகு குறைவாக சம்பளம் வாங்குவோரின் நிலையை அபிவிருத்தி செய்ய சர்க்கார் முதன் முதலாகக் கவனிக்கும் என்று நிதி மந்திரியார் கூறியிருக்கிறார்.

சர்க்கார் ஊழியருக்கு மருத்துவ வசதி

புதியதொரு சலுகை தரப்படுகிறது

சென்னை, டிச. 10—

சர்க்கார் ஊழியர்களில் ரூ 300-க்கும் குறைவாகச் சம்பளம் பெறுவோர், ஸ்தலஸ்தாபன ஊழியர்கள் ஆகியோருக்கு சர்க்கார் அளித்துவரும் வைத்திய வசதியில் மேலும் ஒரு புதிய சலுகையளிக்க சர்க்கார் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கார் மருத்துவ மனை இல்லாத இடங்களிலும், அங்குள்ள தனிப்பட்ட மருத்துவ மனைகளில் சர்க்கார் ஊழியர்களும், அவரது குடும்பத்தாரும் நேரடியாக சிகிச்சை பெற முடியும். டாக்டர் குறிப்பின் மீது அவர்கள் வாங்கும் விலையுயர்ந்த விசேட மருந்துகள் உட்பட, சிகிச்சை செலவை, சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனம் ஏற்றுக் கொள்ளும். தகுந்த அத்தாட்சிகளைக் காட்டி, அங்கீகாரம் பெற்ற வைத்திய அதிகாரி அவற்றைப் பார்வையிட்டபின் பணம் தரப்படும்.

தனிப்பட்ட மருத்துவ மனைகள் இல்லாத இடங்களில், தனிப்பட்ட டாக்டர்களிடம் சிகிச்சை பெற்றாலும் நியாயமான அளவு பணம் சர்க்கார் தரும் என்று சொல்லப்படுகிறது.

காஞ்சீபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்

வேலை நிறுத்தம் செய்தனர்?

"காஞ்சீபுரத்திலும், சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களிலும் சுமார் 4,000 பேர் பட்டு, கை நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கூலியை நாளுக்கு நாள் குறைத்துக்கொண்டே வந்த பட்டு ஜவுளி முதலாளிகளின் போக்கை மாற்றிக் கொள்ளும்படி எடுத்துக் கொண்ட சமரச முயற்சிகள் யாவும் வீணாயின.

"உதவி லேபர் கமிஷனர், இவ்விஷயத்தில் தலையிட்டுச் செய்து வைத்த இடைக்கால ஒப்பந்தத்தையும் முதலாளிகளின் சங்கம் மீறிவிட்டது. இந்நிலையில், தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லையாதலால், 10—12—54-லிருந்து, வேலை நிறுத்தம் செய்வதென, பட்டு, நெசவுத் தொழிலாளிகள் முடிவு செய்துள்ளனர்," என்று, காஞ்சீபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் கே. எஸ். பார்த்தசாரதி அறிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை
லட்சுமி டாக்கீஸ்
(பெரம்பூர் பேரக்ஸ்)
12—12—54 காலை 9 மணிக்கு
தலைவர்: எஸ். எஸ். தென்னரசு
பேசுவோர்:
மு. கருணாநிதி
கா. அப்பாதுரை
வி. சிவப்பிரகாசம்
நன்கொடை அணா 8, 4

★

பெரம்பலூர்
ரேடியோ மைதானத்தில்
13—12—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
து. ப. அழகமுத்து

★

கிருஷ்ணகிரி
கார்னேஷன் மைதானத்தில்
13—12—54 திங்கள் மாலை
தலைவர்: என். நாராயணன்
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ஆர். வெங்கடாசலம்

★

கீழ்குப்பம்
13—12—54 மாலை
தலைவர்: சாரதாம்மாள்
பேசுவோர்:
மணி எழிலன்
ச. இளங்கோ

★

அரிமழம்
14—12—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: அன்பில் தர்மலிங்கம்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

பம்பாய்
தாராவி, வ. உ. சி. திடலில்
15—12—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: எல். நெல்லைச்செழியன்
பேசுவோர்:
இரா. சு. தங்கப்பழம்
இரா. இளம்வழுதி
வடவைக்குயில்

திருக்குறள் வகுப்பு

12-12-54 காலை 10 மணிக்கு, சென்னை, மண்ணடி, 94-95, புதுத் தெரு, இராசமன்னர் பாடசாலையில், திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில், தோழர் இ. முருகேசனார் பேசுவார்.

12-12-54 காலை 9 மணிக்கு, சென்னை, இராயபுரம் ஆதம் சாயபு தெருவிலுள்ள சால விநாயகர் பாடசாலையில், வட சென்னை குறள் நெறிக் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில் தோழர் இ. தியாகராசன் பேசுவார்.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம் முதலாவது ஆண்டு நிறைவு விழா

14-12-54 மாலை 6-30 மணிக்கு, பம்பாய், தாராவி வ. உ. சி. திடலில், தோழர் சு. தர்மராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், சு. வள்ளிநாயகம், மா. இரா. ச. செந்தினசாமி ஆகியோர் பேசுவர். வரவேற்பாளர்: சி. காசிவேல்.

திருமணம்

13-12-54 இரவு 10 மணியளவில், 5-126 கொல்லப்பட்டரை தெரு, பரமக்குடியில், மணமகன் இல்லத்தில், தோழர் எம். ஏ. வகாப்-தோழியர் சன்னத்து அம்மாள் திருமணம் நடைபெறும்.

சேலம் மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கட்கு

"தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சேலம் மாவட்டத்தில், ஜனவரி திங்கள் இறுதி வாரத்திலிருந்து சுற்றுப்பயணம் செய்ய இசைந்துள்ளமையால், பொதுக் கூட்டங்கள் நடத்த விருப்பமுள்ள மாவட்ட கிளைக் கழகங்கள், கூட்டம் நடத்துவதற்கான நிபந்தனைகளையும் விபரங்களையும் கேட்டு, மாவட்ட அலுவலகத்திற்கு உடனடியாக கடிதம் எழுதவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

'திராவிட நாடு' பொங்கல் மலர்

★

முத்தமிழ் மணம் கமழும்
சித்திர ஏடு!

இசனுமி! — டைபீரியஸ் கிரேக்கஸ்
இசனுகி! ★ கெயஸ் கிரேக்கஸ்
கண்ணன் — வக்கீல் வேணுகோபாலர்
நியூடன் ★ குமாரி குலேபகாவலி

அந்தோனிசாமி — பேயாண்டிப் பிள்ளை
இவர்கள் அழைக்கிறார்கள் !!

★

இன்பத் தமிழை ஆரிய வாழ்வுக்கு பாழாக்கிய
கம்பர் அழைக்கிறார்!

இலங்காதிபன் விசுவாமித்திரனைக் கடாவுகிறான்!

தி.மு.க. செயலாற்றும் செம்மல்களை அழைக்கிறது!

★

'திராவிட நாடு' பொங்கல் மலர்
இவ்வளவும் இனிய முறையில் தருகிறது

★

விவரம் அறிய: — 'திராவிட நாடு,' — காஞ்சீபுரம்

'ஜிகாங்கீர் வைரம்' விற்பனை!

பர்துவான் மன்னருக்கு அபராதம்

'ஜிகாங்கீர் வைரம்' லண்டனில் உள்ள ஒரு ஏலக் கம்பெனியாரால் 13,000 பவுனுக்கு சில மாதங்களுக்கு முன்பு விற்பனை செய்யப்பட்டது நினைவிலிருக்கலாம்.

அந்த 'வைரம்' போன்ற விலையுயர்ந்த பரம்பரையான தொல் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதென்று 1947-ல் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றுக்குப் புறம்பாக, அந்த வைரத்தை இங்கிலாந்திற்கு அனுப்பி, விற்ற குற்றத்திற்காக, அந்த வைரத்தின் சொந்தக்காரரான பர்துவான் மன்னருக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த வைரத்தில், பாரசீக மொழியில், 'அக்பரின் மகனான ஜிகாங்கீர் என்ற ஷாஜகான்,' என்று எழுதப்பட்டுள்ளதாம்.

டெல்லியில் இருந்த மயிலாசனத்திலிருக்கும் மயிலின் கொண்டையில், மின்னிக்கொண்டிருந்த இந்த வைரம், சுமார் கி. பி. 1621-லிருந்து இருந்துவந்த ஒன்றாகும்.

இதனாலேயே, இந்த வைரம், தொன்மை வாய்ந்த தொல் பொருள் எனக் கொள்ளப் படுகிறதாம்.

இதை ஏற்றுமதி செய்கையில், இதன் விலை மதிப்பை ரூ. 90,000-மாக மட்டும் காட்டி, 803·05-காரட் வைரம் என்று சொல்லி, அங்குள்ள அதிகாரிகளை ஏமாற்றி, ஏற்றுமதி செய்து விட்டதாக பின்னர், பர்துவான் மன்னர்மீது வழக்குத் தொடரப்பட்டதாம்.

எதிர்த்து வழக்காடிய பர்துவான் மன்னர், தமக்கு அது ஒரு தொல் பொருள் என்பது தெரியாதென்றும், ஆனாலும், அது தங்கள் அரச குடும்பத்தின் பரம்பரைச் சொத்தென்றும் கூறினாராம்

இந்த 'ஜிகாங்கீர் வைரம்' ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்தில், பம்பாய் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருந்ததாயும், லண்டனில் இந்த வைரம் விலை கூறப்பட்ட நேரத்திலேயே, பம்பாயிலிருந்த ஒரு வைர வியாபாரி இதை வாங்கிக் கொள்ளத் தயாராயிருந்ததாயும் வழக்கு விசாரணையின்போது வெளியிடப்பட்டன.

பட்டத்தின் பதவி ஆட்டம் கொடுக்கிறது

திரு—கொச்சியில் உள்ள ம. சோ. கட்சி மந்திரி சபைக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதா இல்லையா என்பது பற்றிப் பரிசீலிக்க சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் கூட்டம் வரும் ஞாயிறன்று நடைபெறவிருப்பதாக திரு—கொச்சிப் பிரதேச காங்கிரஸ் தலைவர் கே. பி. மாதவன் நாயர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட 'ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பது' என்ற ஏற்பாட்டினைக் கடைப்பிடிக்க பட்டம் தாணுப்பிள்ளை தவறிவிட்டதினாலேயே நிலைமையை மறு பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இன்றுள்ள சரித்திரங்கள் உண்மையல்ல!

பண்டித நேரு கூறுகிறார்

கட்டாக், டிச. 10—

"இன்று கல்லூரிகள், பள்ளிகள் இங்கெல்லாம் கற்றுத் தரப்படும் சரித்திரப் புத்தகங்கள், கற்றுத் தருவதற்கு ஏற்றன அல்ல," என்று, பண்டிதநேரு, கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இவை நாட்டை ஆண்டுவந்த மன்னர்கள், சக்ரவர்த்திகள் ஆகியோரின் சரித்திரமாகும்; எனவேதான், அவை சரியானவை அல்ல என்கிறேன். உண்மையான சரித்திரமானால், அது, குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களையும், அவர்கள் வாழ்க்கையையும் பற்றிக் கூறுவதாயிருக்க வேண்டும்," என்றும் நேரு விளக்கம் தந்திருக்கிறார்.

இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த யு. என். தேபார் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று தேர்தல் அதிகாரி எஸ். என். அகர்வால் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,